மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆண்டிபட்டி
முன்னிலை: திரு. C. ராஜேஷ், B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆண்டிபட்டி.
2022 ம் ஆண்டு ஜூன் மாதம் 30 ம் நாள் வியாழக்கிழமை
அசல் வழக்கு எண்.99/2019

C.பவுன்ராஜ் ...வாதி

// எதிர் //

1. C.பால்ராஜ்
2. தெய்வக்கனி
3, லட்சக்கனி
4, சந்திரன்
5, சி.முத்துக்குமார்
6, சார்பதிவாளர், தேனி
7. மாவட்ட பதிவாளர், தேனி
(Amended asper Order in I.A No.3/2020 dated 20.01.2021)

... பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்னர் இன்று விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு . S.முருகன் அவர்கள் முன்னிலையாகியும் , 2,3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு .K.V.ராஜ்குமார் அவர்கள் ஆஜராகியும், 5 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு .N.தெய்வேந்திரன் அவர்கள் ஆஜராகியும் 1, 4, 6, 7 பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜரில்லாததால் தோன்றாத்தரப்பினர் ஆகக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்களான.

## தீர்ப்புரை

தாவா சொத்துக்களில் வாதிக்குள்ள தனித்த பாத்தியத்திற்கும் , அனுபவத்திற்கும் எவ்விதத்திலும் இடைஞ்சல்கள் செய்யக்கூடாதென 1 முதல் 5 பிரதிவாதிகள் அவர்களது வாரிசுகள் வகையாட்கள் , ஏஜேண்டுகள் ஆகியோர்கலுகககு எதிராக நிரந்தர நிலையுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்ககோரியும், வழக்குரை சொத்துக்களில் வாதிக்குள்ள தனித்த பாத்தியத்திற்கும், அனுபவத்திற்கும் எதிராக 1 முதல் 5 பிரதிவாதிகள் 7, 7 பிரதிவாதிகள் அலுவலகத்தில் எவ்வித பத்திர பதிசுகளும் , எவ்வகையிலும், எப்போதும் செய்யக்கூடாதென நிரந்தர நிலையுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கோரியும், இவ்வழக்கு செலவுத்தொகையினை வாதிக்கு பிரதிவாதிகள் வழங்ககோரி இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அசல் வழக்கில் கூடுதல் நீதிமன்ற கட்டணம் செலுத்தாததாலும் வாதி அழைக்கப்பட்டும் ஆஜரில்லாததாலும், எவ்வித எடுத்துரைப்பும் இல்லாததாலும் வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்டுகிறது.

2022ம் ஆண்டு ஜுன் மாதம் 30ம் நாள் இத்தீர்ப்புரை திறந்த நீதிமன்றத்தில் அனைவரின் முன்னிலையிலும் அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/–சி.ராஜேஷ்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஆண்டிபட்டி.